**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 580 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 4** |
| **Name** | : | அழகுலெட்சுமி |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **07.07.2022**

**முதல் விசாரணை :**

நான் மதுரை, நரிமேடு, சுப்பிரமணியசிவா தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் M.Sc Journalism மதுரை காமராஜ் பல்கலைகழகத்தில் 2017 முதல் 2019 வரை படித்தேன். ஆஜர் எதிரியைத் தெரியும். ஆஜர் எதிரி எனக்கு முன்னால் படித்த மாணவர்களுக்கு 2016 முதல் 2017 வரை Guest Lecturer ஆக இருந்தார். நான் முதலாம் ஆண்டு படித்த போது, 26.09.2017 ம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில் வகுப்பிற்கு வந்தோம். நாங்கள் வகுப்பில் இருந்த போது, காலை சுமார் 10.30 மணிக்கு எங்கள் துறையின் தலைவர் ஜெனிபா அசா1 மேடம் அறையில் இருந்து அலறல் சத்தம் கேட்டது. நானும் என்னுடன் படித்த நவீன், சுஜி, பென்சி, மீர்கலிம்ஷா, சிந்துஜா மற்றும் இதர மாணவர்கள் வெளியே சென்று ஓடி சென்று பார்த்தோம். அசா1 அவரது அறையின் கதவுக்கு அருகே கீழே விழுந்து கிடந்தார். அப்போது, இந்த அண்ணா (ஆஜர் எதிரி) அசா1 ஐ கத்தியால் குத்திக்கொண்டு இருந்தார். முதுகு, கழுத்து, மார்பு ஆகிய பகுதிகளில் எதிரி கத்தியால் அசா1 ஐ குத்தினார். எங்கள் அலறல் சத்தம் கேட்டு ஆஜர் எதிரி கத்தியை அங்கேயே போட்டுவிட்டு ஓடிவிட்டார். அதன் பின்னர் நான்

மற்றும் இதர பசங்கள் சேர்ந்து, 108 ஆம்புலன்ஸ் மூலம் எங்கள் மேடம் அசா1 ஐ நாகமலைபுதுக்கோட்டை ஆரம்ப சுகாதாரநிலையம் மருத்துவமனையில் சேர்த்தோம். பின்னர் அங்கிருந்து வடமலையான் மருத்துவமனைக்கு அசா1 ஐ சேர்தோம். அசா1 எங்கள் மேடம் ஆஜர் எதிரியை வேலையை விட்டு நிறுத்திவிட்டதால் கோவத்தில் அசா1 ஐ குத்தியதாக சொன்னார்கள். ஆஜர் எதிரி எங்கள் பல்கலைகழகத்தில் உள்ள மாணவிகளிடம் Misbehave செய்ததாக சொன்னார்கள். அதனால் அவரை எங்கள் மேடம் அசா1 வேலையை விட்டு நிறுத்திவிட்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் கு.வி.</u>

சம்பவ சமயத்தில் நான் இதழியல் துறையில் முதலாம் ஆண்டு படித்துக்கொண்டிருந்தேன். சம்பவம் நடந்த அன்று பொதுவாக வகுப்பறையில் வருகைபதிவேடு எடுப்பது வழக்கம். வருகைபதிவேட்டினை முதலில் அன்று யார் வகுப்பிற்கு வருகிறார்களோ அவர்கள் தான் வருகை படுவேடு எடுப்பார்கள். அன்றைய தினம் வருகைபதிவேடு யாரும் எடுக்கவில்லை. நான் அன்றைய தினம் வருகை பதிவேடு எடுப்பதற்குள் சம்பவம் நடந்ததால் வருகை பதிவேடு எடுக்கவில்லை. நாங்கள் வகுப்பறையில் தான் இருந்தேன். எங்கள் கட்டிடம் 3 மாடி கட்டிடம் ஆகும். அசா1 ன் ரூம் பாலசுப்பிரமணியன் என்பவர் ரூமிக்கு பக்கத்து ரூமில் இருப்பார். அதற்கு பிறகு எங்கள் வகுப்பறை இருக்கும். அன்றைய தினம் எங்கள் வகுப்பறையில் எல்லோரும் வந்திருந்தோம். சுமார் 15 பேர் வந்திருந்தோம். இதழியல் துறையில் வகுப்பறையில் கீழ்தளத்தில் உள்ளது என்றால் எங்களுக்கு Handicapped ஒருவர் வகுப்பு எடுப்பார். அவர் மேலே வர இயலாததால் சில மாணவர்கள் அங்கு சென்று படிப்பார்கள். அவர் இதழியல் வகுப்புகளும் எடுப்பார். கீழ் தளத்தில் தமிழ் டிபார்ட்மெண்ட் உள்ளது. நான் joind செய்த போது 2 Guest Lecturer இருந்தார்கள். நான் சேர்ந்த போது ஆஜர் எதிரி guest lecturer ஆக இல்லை. ஆஜர் எதிரி அந்த

சமயத்தில் இருந்தாரா என்று எனக்குத் தெரியாது. நான் சம்பவ சமயத்தில் ஆஜர் எதிரியை பார்த்து இருக்கிறேன். அதற்கு முன்பு நான் பார்த்தது இல்லை. எதிரி Guest lecturer ஆக வேலை பார்த்தார் என்று கேள்விப்பட்டேன். நான் தற்போது படித்து முடித்துவிட்டு வேலை பார்த்து வருகிறேன். Newscom என்ற APP ல் ரிப்போர்ட்டராக வேலை செய்கிறேன். நான் Journalism படித்துள்ளாதால் வெளியில் வேலைக்கு செல்ல எனது துறைத்தலைவரின் நன்னடத்தை சான்றிதழ் தேவைப்படும். அதே போல் எங்கள் இதழியல் துறையில் Phd படிப்பு படிக்க வேண்டும் என்றாலும் துறைதலைவரின் சிபாரிசு தேவைப்படும். சம்பவம் நடந்த பிறகு நான் அசா1 எங்கள் துறைதலைவரை சென்று பார்த்தேன். அசா1 ஐ நான் சென்று பார்த்தபோது போலிசார் விசாரணைக்கு உறுதுணையாக இருக்குமாறு என்னைக் கேட்டுக்கொண்டார். நான் சத்தம் கேட்டு போன போது, அசா1 அவரது அறையின் வாசலில் குப்புற விழுந்துகிடந்தார். எங்கள் வகுப்பில் இருந்த அனைத்து மாணவர்களும், தமிழ்துறை மாணவர்கள் மற்றும் அருகில் இருந்த வகுப்பறை மாணவர்கள் அனைவரும் சுமார் 30 பேர் கூட்டமாக சேர்ந்து பார்த்தோம். சம்பவ தினத்தில் எங்கள் இதழியல் துறையில் வேலைவாய்ப்பு மேளா எதுவும் நடைபெறவில்லை. வேறு எந்த விழாவும் நடக்கவில்லை. எதிரியை நான் சம்பவத்திற்கு முன்போ பின்போ பார்க்கவில்லை. போலிசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் எங்கள் கல்லூரியில் வந்து விசாரித்தார்கள். இரவு பொழுதில் விசாரித்தார்கள். நேரம் தெரியவில்லை. இரவு சுமார் 09.00 மணிக்குள்ளாகவே போலிசார் எங்களை விசாரணை செய்தார்கள். போலிசார் குறிப்பிட்ட சில மாணவர்களைத்தான் விசாரித்தார்கள் என்றால் அப்போது இருந்த மாணவர்களைத்தான் விசாரித்தார்கள். எங்கள் துறைதலைவர் கொடுத்த பெயரின் அடிப்படையில் தான் என்னை விசாரித்தார்கள் என்றால் நாங்கள் சம்பவ சமயத்தில் அங்கு இருந்ததால் என்னை போலிசார் என்னை விசாரித்தார்கள். சம்பவம் நடந்த அன்று மட்டும் என்னை போலிசார் விசாரணை செய்தார்கள். அதன்பிறகு என்னைவிசாரிக்கவில்லை. எனது ....

ஆடையில் அசா1 ன் இரத்தக்கறை எதுவும் படியவில்லை. நாங்கள் சென்று பார்த்தபோது அசா1 குப்புறத்தான் கிடந்தார். குப்புறவிழுந்துகிடந்தவரைத்தான் மாணவர்கள் ஆஸ்பத்திரிக்கு எடுத்து கொண்டு சென்றார்கள். எதிரி சம்பவத்திற்கு பிறகு கத்தியை போட்டுவிட்டு அங்கு தான் இருந்தார். நாங்கள் சத்தம் போடவும் மற்ற மாணவர்கள் வந்து அவரை பிடித்துவிட்டார்கள். நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவ தினத்தில் நான் கல்லூரிக்கு வரவில்லை என்றால் சரியல்ல. எனது துறைதலைவர் அசா1 கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் துறையில் CCTV Camera இல்லை. எங்கள் துறையில் சம்பவத்திற்கு பிறகு CCTV Camera வைத்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். நான் கல்லூரிக்கு சம்பவ தினத்தின் போது வருகை தந்ததற்காக வருகைபதிவேட்டை போலிசார் விசாரணையின் போது கொடுத்தேனா என்றால் போலிசார் விசாரணையின் போது staffs யாரும் இல்லை. அதனால் கொடுத்திருக்கமாட்டார்கள். சம்பவ தினத்தில் காலை 10.00 மணிக்கு attendance எடுத்திருக்கவேண்டும் என்றாலும் அன்றைய தினம் நான் வராததால் தான் attendance எடுக்கவில்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அசா1 மேடம் தான் 10.00 மணிக்கு வந்து வருகைபதிவு எடுக்கவேண்டும். ஆனால் அதற்குள் சம்பவம் நடைபெற்றதால் அவர் வரவில்லை. ஆஜர் எதிரி யாரிடம் misbehave செய்தார் என்று யார் எனக்கு சொன்னார்கள் என்றால் எனக்கு முன்னால் படித்த senior சொன்னார்கள். நான் சம்பவ சமயத்தில் முதலாம் ஆண்டு படித்தேன். 2 ம் ஆண்டு மாணவர்கள் சொன்னார்கள். எந்த மாணவி மற்றும் எந்த ஊழியரிடம் எதிரி misbehave செய்தார் என்று தெரியவில்லை. தங்கதுறை, சிதம்பரம், மீர்கலிம்ஷா ஆகிய எனது சீனியர்கள் தான் எனக்கு ஆஜர் எதிரி misbehave செய்ததாக சொன்னார்கள். எங்கள் துறைதலைவர் அசா1 இடம் நான் மிகவும் நெருக்கமாக பழகினேன் என்றால் சரியல்ல. Paper valuation ஐ அந்த அந்த துறை சார்ந்த staff செய்வார்கள். அந்தந்த

subject எடுப்பவர்கள் paper valuation செய்வார்கள். அவர்கள் துறைதலைவரின் கண்காணிப்பில் தான் paper valuation செய்வார்கள் என்றால் சரியல்ல. அந்தந்த subject எடுப்பவர்கள் பார்த்துவிட்டு மார்க் போடுவார்கள். அந்தந்த subject எடுப்பவர்கள் அனைவரும் துறைதலைவர் கட்டுப்பாட்டில் உள்ளவர்கள் என்றால் சரிதான். எங்கள் துறைதலைவரின் தயவு இருந்தால் தான் university யில் உதவி பெற்று phd செய்யமுடியும் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. 2ம் ஆண்டு மாணவர்கள் phd படிக்கும் நிலையில் இருந்தார்கள். துறைதலைவர் தான் Phd படிப்பிற்கு ஒப்புதல் கொடுப்பார் என்றால் சரியல்ல. ஆராய்ச்சி படிப்பு படிப்பதற்கு துறைதலைவரின் அனுமதி பெறவேண்டும். நான் சம்பவ தேதியில் தங்கதுறை, சிதம்பரம், மீர்கலிம்ஷா ஆகியோர் துறைதலைவருக்கு வேண்டப்பட்ட மாணவர்கள் என்றாலும், துறைதலைவரின் ஆதரவு வேண்டும் என்பதாலும் அசா1 எங்கள் துறைதலைவர் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த கல்லூரியின் ஆவணங்களை எடுத்துப்பார்த்தால் scholership பெறும் மாணவர்கள் பற்றிய விபரம் தெரியும். 2ம் ஆண்டு மாணவர்களின் வகுப்பறை 3ம் தளத்தில் உள்ளது. முதலில் பாலா சார் ரூம் இருக்கும், அடுத்து துறைதலைவர் அசா1 ன் ரூம் இருக்கும் அதற்கு பிறகு எங்கள் வகுப்பறை, அதற்கு பிறகு தமிழ்துறையின் ஒரு மேடை இருக்கும் அதற்கு பிறகு தான் 2ம் ஆண்டு மாணவர்களுக்கான வகுப்பறை இருக்கும். நான் படித்த போது 2 பேர் அலுவலகத்தில் வேலைபார்த்தார்கள். ஒருவர் பெயர் சீதா, மற்றொருவர் பெயர் ஞாபகம் இல்லை. வேறு அலுவலக மேனேஜர் என்ற பதவி உள்ளதா என்றால் எனக்கு அந்த இரண்டு பேரை மட்டும்தான் தெரியும். வேறு யாரும் இல்லை. Guest Lecturers இரண்டு பேர் இருப்பார்கள். எங்கள் துறைதலைவர் அறையானது, கண்ணாடி கதவு போட்ட அறை ஆகும். குளிர்சாதம் பொறுத்தப்பட்ட அறை ஆகும். அந்த அறையில் பேசினால் வெளியே கேட்காது. இன்று நான் நீதிமன்றத்திற்கு வரச்சொல்லி அசா1 எனக்கு தகவல் சொன்னார் என்றால் சரிதான். அசா1 எங்கள் துறைதலைவரின்

சிபாரிசுகள் வேண்டும் என்பதால், நான் அவருக்கு வேண்டப்பட்ட கட்டுப்பட்ட சாட்சி என்றால் சரியல்ல. நான் சம்பவ சமயத்தில் அந்த கல்லூரியில் படிக்கவில்லை என்றால் சரியல்ல. போலிசார் விசாரணையின் போது நான் எனது அடையாள அட்டையை கொடுத்தேன். சம்பவ சமயத்தில் எங்கள் கல்லூரியல் இதழியல் துறையின் சார்பாக வேலைவாய்ப்பு முகாம் நடந்தது என்றும் அப்போது எங்கள் துறைதலைவர் அசா1 பலபேரிடம் வேலை வாங்கி தருவதாக ஆசைவார்த்தை கூறியிருந்தார் என்றால் சரியல்ல. அசா1 ஆல் ஏமாற்றப்பட்ட பாதிக்கப்பட்ட யாரோ ஒருவர் தான் சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் அந்த கல்லூரியில் படிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் படித்திருந்தார் அதற்கான ஆவணங்களை கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. அசா1 கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை